**செய்தி வெளியீடு எண்: 189** **நாள்: 27.02.2011.**

# <u>லிபியா நாட்டிலிருந்து கிளர்ச்சி காரணமாக தமிழகம் திரும்புபவர்களை அவரவர்தம் சொந்த ஊர்களுக்கு அனுப்பிட ஏற்பாடு</u>

தமிழகத்திலிருந்து லிபியா நாட்டிற்கு வேலை நிமித்தம் பலர் சென்றுள்ளனர். தற்போது லிபியாவில் நடைபெறும் கிளர்ச்சியில் சிக்கியுள்ள இந்தியர்களை மீட்டு தாய்நாட்டிற்குக் கொண்டுவரும் பணியை நடுவணரசு செய்து வருகிறது. இதில், தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் இன்று முதல் விமானம் மூலம் சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் விமான நிலையங்களில் வந்து சேருகின்றனர். விமான நிலையங்களில் தாயகம் திரும்பும் தமிழர்களை வரவேற்றிடவும், உடனுக்குடன் அவரவர்தம் சொந்த ஊர்களுக்கு அரசு செலவில் பாதுகாப்பாக அனுப்பி வைக்கவும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்கள்.

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**